## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 7/2020 | Date : 12.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: கந்தாயி | W/o. அம்மாசி | |
| Evidence Recorded Time: 03.56 P.M. to 04.25 P.M | | |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

பிராதை தாக்கல் செய்ய நாங்கள் சொல்லியிருக்கும் சட்டப்பிரிவு தவறு என்றால் சரியல்ல. தரப்பினர்களின் வயதை வேண்டுமென்றே தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ரெட்டியூருக்கு மேல்புறத்தில் உள்ளது. கிராமத்தின் பெயர் தெரியாது. வழக்கு சொத்து விவரத்தில் என்ன கொடுத்துள்ளேன் என்றால் தெரியாது. எனக்கு 50 வயதாகிறது. எனக்கு 17 வயதாக இருக்கும் போது திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்றது முதல் நான் என் கணவர் வீட்டில்தான் இருந்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், நான் கொடுத்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றாலும், அந்த அறிவிப்பை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தினை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் என் அண்ணன் ராமசாமி அனுபவித்து வருகிறார். சொத்தில் என்ன பிரச்சனைகள் வந்ததது, அதற்கு என் அண்ணன் என்ன செய்தார் என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாவாயம்மாள் எனது அம்மா ஆவார். எனது அம்மாவிற்கு எனது அண்ணன் மட்டும்தான் ஆண் வாரிசு என்றால் சரிதான். 15.07.2019 ம் தேதியில் நாங்கள் அனைவரும் சொத்தை எப்படி பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று பேசினோம் என்றால் சரிதான். 15.07.2019-ம் தேதி பேசியதன் அடிப்படையில் மூன்று பெண் மக்களுக்கும் தலா ஆறு லட்சம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மூன்று பெண் பிள்ளைகளும் 1ம் பிரதிவாதி ராமசாமியின் உடன் பிறந்தவர்கள் ஆவோம், 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு அக்கா ஆவார்கள். சகோதரிகள் என்பதால் 15.07.2019-ம் தேதியில் பணம் பெற்றுக்கொண்டதற்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும்,

அதன் பின்னிட்டு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுப்பதாக சொன்னோம் என்றாலும் அதுபற்றி தெரியாது. 20.07.2019–ம் தேதியில் 1ம் பிரதிவாதி பாகவிடுதலை பத்திரம் எழுதிக்கொடுக்க அழைத்தபோது எனக்க உடல்நிலைய சரியில்லை என்று நான் சொன்னதாகவும், பின்னிட்டு எழுதிக்கொடுப்பதாகவும் நான் சொன்னதாக சொன்னால் என்னை என் அண்ணன் அழைக்கவில்லை. 20.07.2019–ல் 2, 3 பிரதிவாதிகள் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அறிவிப்பில் 2, 3 பிரதிவாதிகளின் பிரதிவாதிகளின் ஒப்புதல் இல்லாமல் மேற்படி ஆவணம் எழுதப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பாகவிடுதலை பத்திரத்தை பற்றி என்னுடைய வழக்குரையில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. சாட்சி அதன் பிறகு சொல்லியுள்ளதாக கூறுகிறார். பத்திரம் பதிவு செய்த பிறகும் என்னிடம் 1ம் பிரதிவாதி பலமுறை விடுதலை பத்திரம் எழுதி தரக்கேட்டார் என்றும் பணம் பெற்றுக்கொண்டதால் பணம் யார் முன்னிலையில் இருந்து கொடுக்கப்பட்டதோ, அவர்கள் முன்னிலையில் விடுதலை பத்திரம் எழுதி தரசொல்லப்பட்டது என்றால் இல்லை. அவ்வாறு பாக விடுதலை பத்திரம் எழுதிதராமல் பொய்யான காரணங்களை தெரிவித்து வந்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய பாகத்திற்கான தொகையினை நான் பெற்றுக்கொண்டதால் 1ம் பிரதிவாதிக்கு பாகவிடுதலை பத்திரம் எழுதி தர நான் கடமைப்பட்டவர் என்றும், அது சம்மந்தமாக பதில் அறிவிப்பில் 23.10.2019 அன்று பத்திர அலுவலகத்திற்கு வந்து பாக விடுதலை எழுதி தருமாறு கூறப்பட்டிருந்தது என்றால் அவ்வாறு இல்லை. பதில் அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது, எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தார். பதில் அறிவிப்பில் 23.10.2019 அன்று பத்திர அலுவலகத்திற்கு வந்து பாக விடுதலை எழுதி தருமாறு கூறியிருந்ததை என் வழக்கறிஞர் சொன்னாரா என்றால் இல்லை. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் அது சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. பதில் அறிவிப்பிற்கு நான் பணம் வாங்கவில்லை என்றும், நான் விடுதலை பத்திரம் எழுதி தர கடமைப்பட்டவர் இல்லை என்றும் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். பதிலுரை தாக்கல் செய்த பிறகு அதை மறுத்து கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் நடைபெற்ற உண்மைகளை மறைத்து இந்த வழக்கை நான் தாக்கல்

செய்துள்ளதால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் முன்னுப்பின் முரணான வாதங்களை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்திற்கும் எனக்கும் பணம் பெற்றுக்கொண்ட தேதியான 15.07.2019 முதல் எந்த விதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் திருமணத்திற்கு பிறகு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். வழக்கில் சொத்தின் மதிப்பு எவ்வளவு காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது, ஒரு செண்ட நிலம் ரூபாய் இருபதாயிரத்திற்கு செல்லும். என்னுடைய பாகத்திற்கு வழக்கு மதிப்பு எவ்வளவு காட்டியுள்ளேன் என்றால் தெரியாது. எனது இரண்ட சகோதரிகளும் எழுதிக்கொடுத்த பாக விடுதலை பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து ஒவ்வொருவரின் பாகமும் ரூபாய் ஆறு லட்சம் வரும் என்றாலும், அந்த மதிப்பை குறைத்து காட்டவேண்டும் என்பதற்காக பிராதில் திருத்தி காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தின் நான்கு பக்கம் யார் யார் இருக்கிறார்கள் என்று தெரியாது. எதை பார்த்து சொத்தின் அளவை குறிப்பிட்டுள்ளேன் என்று தெரியாது. வழக்கில் காட்டியுள்ள சொத்து விவரம் தவறு என்றாலும், தாவா சொத்தின் சுவாதீனத்தில் நான் இல்லை என்றாலும்  சரியல்ல. சொத்தின் சுவாதீனத்தில் இல்லாத நிலையில் நான் வழக்கில் காட்டியுள்ள மதிப்பு தவறு என்றால் சரியல்ல. சொத்தில் எனக்குரிய பாகத்திற்கு பணத்தை பெற்றுக்கொண்டு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுக்காமல், தற்போது அதிக பணம் பெறவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனக்கு வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.